கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in


---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 06.06.2025

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உலக சுற்றுச்சூழல் தினம் 2025

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் (AEC&RI), கோயம்புத்தூர், உலக சுற்றுச்சூழல் தினம் 2025 ஜூன் 5ஆம் தேதி 2025 அன்று கொண்டாடியது. "பிளாஸ்டிக் மாசுபாட்டை முடிவுக்கு கொண்டு வருவது" என்ற உலகளாவிய தொனிப் பொருளை மையமாக கொண்டு, உடனடி சுற்றுச்சூழல் நடவடிக்கையின் அவசியத்தை வலியுறுத்தும் நிகழ்வாக இது அமைந்தது.

இந்நிகழ்வு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பொறுப்பு துணைவேந்தர் முனைவர் இரா. தமிழ்வேந்தன் அவர்களின் தலைமையில் மற்றும் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் (AEC&RI), கோயம்புத்தூர் முதன்மையர் முனைவர் ஏ. ரவிராஜ் அவர்களின் முன்னிலையில் நடைபெற்றது.

கல்லூரியின் ஈக்கோ கிளப் (EcoClub) ஏற்பாட்டில், "ஈகோத்தான் 2025" பசுமை போராளிகளின் குரலும் கனவுகளும்" என்ற தலைப்பில் சிறப்பாக நடைபெற்ற இந்நிகழ்வில், "சூழல் அறிவோம்" எனும் சிறப்புரையாக திரு. எஸ். சதீஷ்குமார் அவர்கள் சுற்றுச்சூழல் சவால்கள் மற்றும் தீர்வுகள் குறித்து சிந்திக்கவைக்கும் உரையாற்றினார்.

ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல் துறையின் மாணவர்கள், தங்களது அறிவு, படைப்பு திறன் மற்றும் விழிப்புணர்வுடன் நிகழ்ச்சியில் பங்களித்தனர். பூமிக்கு எதிராக பிளாஸ்டிக் கொடுமை எனும் மாதிரி – இயற்கைக்கும் மாசுபாட்டிற்கும் இடையிலான போராட்டத்தை உருவகமாகக் காட்டியது. பிளாஸ்டிக் கதையம்சம் – பிளாஸ்டிக்கின் வரலாறும் பாதிப்புகளும் தொடர்பான நேரக் கோடு மாதிரி, பிளாஸ்டிக் மாசுபாட்டின் சிக்கல்களும், அதற்கான புதுமையான தீர்வுகளும் குறித்த தகவல் காட்சிகள், "பிளாஸ்டிக் இல்லாத உலகம்" என்ற தலைப்பில் விழிப்புணர்வு காணொளி, "தூய்மையான பசுமை சுற்றுச்சூழல் – அனைத்து உயிரினங்களுக்கும் அவசியம்" என்ற கருப்பொருளில் ஒளிப்படங்களுடன் கூடிய ஃபிளாஷ் மாப் நிகழ்ச்சி, போன்றவை நடைபெற்றன.

மேலும், மாணவர்கள் கல்லூரி வளாகத்தில் "Plastic Detox" ஆய்வை மேற்கொண்டு, களப்புற பிளாஸ்டிக் கழிவுகளை திரட்டி, அதை மூன்று பேர் அமரக்கூடிய மேசையாக மாற்றியமைத்தனர். இந்த "கழிவில் இருந்து செல்வம்" மாறுதல் முயற்சி, முதன்மையர் முனைவர் ஏ. ரவிராஜ் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்த மாணவர்களின் முயற்சிகள் அறிவியலும், படைப்பாற்றலும், சுற்றுச்சூழல் விழிப்புணர்வும் ஒன்றாக கலந்து ஒரு பொறுப்புள்ள சமுதாயத்தை உருவாக்கும் பக்கபலமாக இருந்தது. நிகழ்ச்சி முடிவில், பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் பிளாஸ்டிக் பயன்பாட்டை குறைக்கவும், எதிர்காலத் தலைமுறைக்காக பூமியை பாதுகாக்கவும் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**